மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

129. தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சிட் பண்டு சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் எல்லைக்குள் அமைந்துள்ள பேங்க் ஆப் கொச்சின் லிமிடெட்டின் கிளைகளை அங்கீகாரம் பெற்ற வங்கியாக அறிவிக்கும் பொருட்டு வணிக வரிகள்—அறக் கட்டளைகள் துறையின் 25—1—1979ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 70-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட் பண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%130. 1978ஆம் ஆண்டிற்கான அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 6ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%131. 1978ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 7ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

%132. 1978ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 7ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*102. 1978—79ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி பற்றிய, தமிழ்நாடு வேளாண் பண்ணைக் கழகத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

**103. சில வேளாண்மைத் திட்டங்கள், புதிய ரகங்கள் குறித்த சிறு புத்தகங்கள் (தமிழ்).